# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 75 — 1973 අගෝස්තු 31 වැනි සිකුරාදා — 1973.08.31

75 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 895 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் . | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 900 | ஏலவிற்பனைகள் .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


*கவனிக்க.—மகாநுவர பௌத்த இளைஞர் கழகம் சட்ட மூலம் 1973 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறை நிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*இலங்கை அரச கடற்படை*

பின்வரும் வேலைகளுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை இலங்கைக் கடற்படைக் கேள்விச் சபைத் தலைவர் ஏற்றுக் கொள்ளுவார் :—

| வேலையின் தன்மை | கேள்விப்பத்திரங்களின் முடிவு திகதி | வேண்டப்பட்ட தகைமை ரூ. ச. |
|---|---|---|
| கொழும்பு–13, கொச்சிக்கடை, இ. க. படை நங்கூலியில் உள்ள மாலுமிகள் இல்லக் கட்டிடத்தை பூர்த்தி செய்வதற்கு | 1973, செப். 20 | 2,50,000.00 |

2. கொழும்பு-1, இலங்கை அரச கடற்படைத் தலைமை அலுவலகத்தின் தலைமைப் பொறியியல் அலுவலரிடமிருந்து பெறப்படும் பிரதி விண்ணப்பங்களில் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இத்தலைமை அலுவலக நிதி, குடியியல் நிருவாக அதிகாரியின் அலுவலகத்தில் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100/- கட்டப்பட்டு, அப்பற்றுச்சீட்டை 17 ஆம் இலக்க அறையில் சமர்ப்பித்தால் 1973 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை தலைமைப் பொறியியல் அலுவலரினால் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். திரும்பப் பெறமுடியாத கேள்விப்பத்திரப் பணமாக 5/- ரூபாவும் கொடுக்கப்படவேண்டும். காசோலைகள், காசுக் கட்டளைகள் தபால்கட்டளைகள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா

3. மேலே குறிப்பிடப்பட்ட பெறுமதியுள்ள அரசாங்க ஒப்பந்த வேலையைப் பொறுப்பெடுப்பதற்கான எழுத்து மூலமான சான்று பகரக்கூடிய ஒப்பந்தகாரர் மட்டுமே கேள்விப்பத்திரத்திற்கு தகுதியுடையவராவார்.

4. கேள்விப் பத்திரங்கள் இத்தலைமை அலுவலகத்தில் 14 ஆம் அறையிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடுதல் வேண்டும், அல்லது முதலாம் பந்தியில் கூறப்பட்டபடி கேள்விச் சபைத் தலைவருக்குக் கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபால் மூலம் அத் தபாலுறையின் இடது பக்க மூலையில் "கொழும்பு 13, கொச்சிக்கடை இ.க. படை நங்கூலியில் உள்ள மாலுமிகள் இல்லக் கட்டிடத்தைப் பூர்த்தி செய்வதற்கான கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும். நேரத்திற்கும் திகதிக்கும் பிந்திக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

5. கேள்விப் பத்திரம் ஆரம்பிக்கப்படும் திகதியிலிருந்து எட்டுக் கிழமைக்கால வெல்லைக்குள் கேள்வியாளர்கள் தம் வேண்டுதல்களைக் கேட்கும்படி வேண்டப்படுகின்றனர்.

6. ஒரு கேள்விப்பத்திரத்தின் ஏதாவது ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதோ அல்லது ஆட்சேபனை இன்றி ஒன்றையோ அன்றி முழுக் கேள்விப்பத்திரங்களையோ தன்னெண்ணப்படி நிராகரிப்பதற்கு கேள்விச்சபைத் தலைவர் உரிமையுடையவராவர். கேள்விப் பத்திரங்களுடன் கொடுக்கப்படும் கேள்விப் பத்திரத்தின் பொது நிபந்தனைகளுக்கும் இவ்வறிவித்தலில் காணப்படும் எல்லா நிபந்தனைகளுக்கும் கட்டாயமாக அமையாத கேள்விப்பத்திரம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

*முக்கிய அறிவித்தல்*

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) வினும் (IIஆ) வினும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

7. எவராவது ஒரு கேள்வியாளர் கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதிக்கு முன்னர் கேள்விச்சபைத் தலைவருக்கு அறிவிக்காமல் கேள்விக்கு மறுப்பு தெரிவித்தாலோ அன்றி சமுகமளியாது விட்டாலோ கேள்வி வைப்புப் பணம் முடிக்கு உரியதாக கொள்ளப்படும்.

8. கேள்வியாளராகத் தெரியப்படுபவர் இந்த உடன்படிக்கையின் கீழ் வேலையைச் செய்வதற்கு இலங்கைத் தொழிலாளரை மட்டும் வேலைக்கு அமர்த்த வேண்டும். அத்துடன் இந்த வேலையை நடாத்தும் தேதியிலிருந்தே பெரும்பாலும் இத்தகைய தொழிலாளரை நியமிக்கவும் வேண்டும்.

9. மேலே குறிப்பிடப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் கேள்விப் பத்திரங்கள் ஆரம்பிக்கப்படும் நேரத்திற்குச் சமுகமளிக்கக் கேள்வியாளரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ அனுமதிக்கப்படுவார்கள்.

10. இத்தலைமை அலுவலகத்தின் 17 ஆம் இலக்க அறையில் மாதிரி முறைகளை பார்வையிட முடியும். கொழும்பு 1, கடற்படைத் தலைமை அலுவலருடன் தொடர்பு கொள்வதன் மூலம் வேலைகளையும் மாதிரி முறைகளையும் பார்வையிடமுடியும்.

11. மேலும் விபரங்களுக்குத் தலைமைப் பொறியியல் அலுவலருக்கு விண்ணப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

எச். ஜே. எஸ். போல்சிங்,
ஏவுநர் (ஈ)
தலைமைப் பொறியியல் அலுவலருக்காக.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
த. பெ. இல. 593,
கொழும்பு 1,
1973 ஓகஸ்ட் 20.

2-1255—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75.

---

## உணவுப் பொருட்களுக்கான கேள்விப்பத்திரங்கள்

இலங்கைக் கடற்படை

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 1974 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை (12 மாதங்கள்) கீழ்க்காணும் வழங்கற் சேவைகளுக்குரிய கேள்விப் பத்திரங்கள் ஒவ்வொரு சேவைக்கெதிரே காட்டப்பட்டுள்ள திகதிகளில் காலை 10.00 மணிவரை கொழும்பு, த. பெ. இல. 593, கொடிமர வீதியிலுள்ள இலங்கைக் கடற்படைத் தலைமை அலுவலகக் கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும் ;—

| I<br>வழங்கல் | II<br>கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி/நேரம் | III<br>கேள்விப் பத்திரங்கள் முடிவடையும் திகதி/நேரம் | IV<br>விண்ணப்பப் பத்திரங்கள் ஆரம்பிக்கும் திகதி/நேரம் |
|---|---|---|---|
| *(அ) திருகோணமலையிலுள்ள தரைப்படை, இலங்கைக் கடற்படை, இலங்கை விமானப்படையினருக்கு இறைச்சி வழங்கல் .. | 17.9.73 பகல் 12 .. | 20.9.73 மு. ப. 10 .. | 20.9.73 மு. ப. 10.30 |
| *(ஆ) திருகோணமலையிலுள்ள தரைப்படை, இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படையினருக்கு புதிய மீன் வழங்கல் .. | 17.9.73 பகல் 12 .. | 20.9.73 மு. ப. 10 .. | 20.9.73 மு. ப. 10.30 |
| *(இ) கொழும்பிலுள்ள தரைப்படை, இலங்கைக் கடற்படை, இலங்கை விமானப் படையினருக்கு புதிய மீன் வழங்கல் .. | 17.9.73 பகல் 12 .. | 20.9.73 மு. ப. 10 .. | 20.9.73 மு. ப. 10.30 |
| (ஈ) கொழும்பிலுள்ள இலங்கைக் கடற்படையினருக்கு காலை ஆகார வகைகள் வழங்கல் .. .. .. | 18.9.73 பகல் 12 .. | 21.9.73 மு. ப. 10 .. | 21.9.73 மு. ப. 10.30 |
| (உ) ருகமம், வெலிசறையிலுள்ள இலங்கைக் கடற்படையினருக்கு இறைச்சி வழங்கல் .. .. .. | 18.9.73 பகல் 12 .. | 21.9.73 மு. ப. 10 .. | 21.9.73 மு. ப. 10.30 |
| (ஊ) ருகமம், வெலிசறையிலுள்ள இலங்கைக் கடற்படையினருக்கு புதிய மீன் வழங்கல் .. .. .. | 18.9.73 பகல் 12 .. | 21.9.73 மு. ப. 10 .. | 21.9.73 மு. ப. 10.30 |
| (எ) ருகமம், வெலிசறையிலுள்ள இலங்கைக் கடற்படையினருக்கு மரக்கறி, தேங்காய், வெண்ணெய், கோழி முட்டைகள் ஆகியன வழங்கல் .. .. .. | 18.9.73 பகல் 12 .. | 21.9.73 மு. ப. 10 .. | 21.9.73 மு. ப. 10.30 |
| (ஏ) ருகமம், வெலிசறையிலுள்ள இலங்கைக் கடற்படையினருக்கு காலை ஆகார வகைகள் வழங்கல் .. .. | 18.9.73 பகல் 12 .. | 21.9.73 மு. ப. 10 .. | 21.9.73 மு. ப. 10.30 |
| (ஐ) யாழ்ப்பாணம், காரைநகரிலுள்ள இலங்கைக் கடற்படையினருக்கு காலை ஆகார வகைகளும், மரக்கறி, தேங்காய், வெண்ணெய், கோழிமுட்டை வழங்கல் .. .. .. | 19.9.73 பகல் 12 .. | 24.9.73 மு. ப. 10 .. | 24.9.73 மு. ப. 10.30 |
| (ஒ) யாழ்ப்பாணம், காரைநகர் இலங்கைக் கடற்படையினருக்கு இறைச்சியும், புதிய மீனும் வழங்கல் .. | 19.9.73 பகல் 12 .. | 24.9.73 மு. ப. 10 .. | 24.9.73 மு. ப. 10.30 |
| (ஓ) தங்காலை இலங்கைக் கடற்படையினருக்கு காலை ஆகார வகைகளும் மரக்கறிகள், தேங்காய்கள், வெண்ணெய், கோழிமுட்டைகள், இறைச்சி, புதிய மீன் முதலியன வழங்கல் .. | 19.9.73 பகல் 12 .. | 24.9.73 மு. ப. 10 .. | 24.9.73 மு. ப. 10.30 |
| (ஔ) கல்பிட்டி இலங்கைக் கடற்படையினருக்கு காலை ஆகாரவகைகள், மரக்கறிகள், தேங்காய்கள், வெண்ணெய், கொழிமுட்டை, இறைச்சி, புதிய மீன் முதலியன வழங்கல் .. | 19.9.73 பகல் 12 .. | 24.9.73 மு. ப. 10 .. | 24.9.73 மு. ப. 10.30 |
| (ஃ) லக்சபானு இலங்கைக் கடற்படையினருக்குக் காலை ஆகார வகைகள், மரக்கறிகள், தேங்காய்கள், வெண்ணெய், கோழிமுட்டைகள், இறைச்சி, புதிய மீன் முதலியன வழங்கல் .. | 19.9.73 பகல் 12 .. | 24.9.73 மு. ப. 10 .. | 24.9.73 மு. ப. 10.30 |

2. இத்தகைய பொறுப்புவாய்ந்த கேள்விப்பத்திரச் சேவைகளை ஏற்று நடத்தக் கூடிய தகுதி, நிதிநிலைமை சம்பந்தமான முழு விபரங்களையும் விண்ணப்பதாரர் எழுத்து மூலமாக விண்ணப்பித்தால் மேற்படி வழங்கற் சேவைகளுக்கான கேள்விப்பத்திரப் படிவங்கள் கொழும்பு, த. பெ. இல. 593, கொடிமரவீதி, இலங்கைக் கடற்படைத் தலைமை அலுவலகம், கடற்படைத் தளபதியினால் பிரிவு II இல் குறிப்பிடப்பட்டவாறு ஒவ்வொரு வழங்கல் திகதிகளிலும் பகல் 12 மணிவரை கேள்விப்பத்திரப்படிவங்கள் கொடுக்கப்படும்.

3. கேள்விப்பத்திரம் எதுவும் வினியோகிப்பதற்கு முன்னர் ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் திரும்பப் பெறக்கூடிய கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 75 கடற்படைத் தலைமை அலுவலகத்தில் கட்டப்படவேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. காசுக்கட்டளை ஏற்றுக் கொள்ளப்படும். அக்கட்டளை கடற்படைத் தளபதியின் பேரில் எழுதப்படல் வேண்டும்.

4. கேள்வியாளர் கேள்விப்பத்திரப்படிவங்களுக்கு விண்ணப்பிக்கும்போது தங்கள் முழுப்பெயர்களையும் முகவரிகளையும் கொடுத்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரப் படிவத்திற்கான விண்ணப்பதாரர் கேள்விப்பத்திரத்திற்கு வேண்டிய இடங்களையும் தாம் விரும்பிய வழங்கற் சேவைகளையும் தருதல் வேண்டும்.

*இணைந்த சேவைக் கேள்விப்பத்திரங்கள்

டி. பி. குணசேகரா,
கொமொடோர்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தளபதி தலைமை அலுவலகம்,
இலங்கைக் கடற்படை,
த. பெ. 593, கொழும்பு 1.

8-1147—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

### புத்தளம் மாவட்டத்தில் கட்டிட வேலைகளுக்கான கேள்விப்பத்திரம்

புத்தளம் மாவட்டத்தில், கீழ்க் குறிப்பிடப்படும் கட்டிட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள், கொழும்பு, த.பெ. இல. 500, காணிக் கொமிஷனர் இலாகா கேள்விப்பத்திர மண்டலத்தின் தலைமையாளரால் 73.09.17 ம் திகதி ந. ப. 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விபரம் | காரியாதிகாரியின் பிரிவு | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| நரியாகம கோவில் தெரு, 2 ம் கட்டை | சிலாபம் | 25,000 |

2. அரசாங்க அலுவலகங்களில் மேலே கூறப்பட்டிருக்கும் தொகை ரூபாவுக்கும் அல்லது அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், தொழிற் சங்கங்களுக்கும், கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும் கேள்விப் பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள் 73.9.14 ந் திகதி ந. ப. 12.00 மணிவரை புத்தளம் கச்சேரியில் வினியோகிக்கப்படும்.

3. கொந்தராத்துக்காரர்கள், மேற்கூறிய வேலைகளுக்குக் கேள்விப்பத்திர வைப்புப்பணமாக ரூபா 50 வீதம், புத்தளம் கச்சேரியிலோ, வேறெந்தக் கச்சேரியிலோ அல்லது பொதுத் திறைசேரியிலோ பணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், மேலே கூறப்பட்ட ரூபா அல்லது அதற்கு மேலான தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர் என அத்தாட்சிப்படுத்தும், பத்திரங்களை, கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப்பத்திரங்கள் கொடுபடமுன், புத்தள அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

அங்கிகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம் கட்டத் தேவையில்லை. எப்படியென்றாலும் மேலே கூறப்பட்ட ரூபாவுக்குப் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களைச் சமர்ப்பித்த பின்னரே கேள்விப்பத்திரங்கள் இவர்களுக்கு வழங்கப்படும். காசோலைகள் தபாற்கட்டளைகள், காசுக்கட்டளைகள் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. புத்தளம் அரசாங்க அதிபரிடம் இருந்து பெறும் பத்திரங்கள் இணைப்பிரதியில் நிரப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களில் கையொப்பமிட்டு, திகதியிட்டு, முத்திரையிடப்பட்ட கவரில் போட்டு அக்கவரின் இடது பக்க மேல் மூலையில் "..................... கட்டுவேலைக்கான கேள்விப்பத்திரங்கள்" எனக் குறிப்பிடவேண்டும். கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால் கேள்விப்பத்திரங்களைத் தாமாகவே கொழும்புத் திறைசேரி, மூன்றாவது தட்டிலுள்ள 320 ஆம் இலக்க அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடவேண்டும்.

5. கேள்விப்பத்திரங்க்ள் 1973 ஆண்டு செப்தம்பர் மாதம் 17 ந் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு மேலே குறிக்கப்பட்ட இல. 320 ம் அறையில் திறக்கப்படும் பொழுது கேள்விக்காரர்களோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளோ சமுகமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

6. காரணம் காட்டாமல் கேள்விப்பத்திரங்களில், ஏதாவதொன்றையோ அதன் பகுதியொன்றையோ ஏற்றுக்கொள்ளவும், கேள்விப் பத்திரங்களில், ஏதாவதொன்று அல்லது முழுவதையும் நிராகரிக்க கேள்விப்பத்திரச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரர், தமது கேள்விப் பத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டவுடன் கேள்விக்குரிய தொகை ரூபாவின் நூற்றுக்கு ஐந்து வீதத் தொகையை பாதுகாப்புப் பணமாகக் கட்ட வேண்டும். அத்துடன் ஏழு நாட்களுள் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரருக்கு அவர் கொடுத்த விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ, தெரிந்தெடுக்கப்பட்டதை கடித மூலம் அறிவித்தால், கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக்கொண்டார் என்று கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றி கடிதம் பெற்ற ஒருவர், ஒப்பந்தம் எழுதத் தவறுவராயின் அவர் கட்டிய கேள்விப் பத்திர வைப்புப்பணம் அரசாங்கத்துக்குச் சொந்தமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரக்காரர், கேள்விப் பத்திரத் தொகையின் நூற்றில் ஐந்து பங்கைக் கட்டியவுடன், தேர்ந்தெடுக்கப்படாதோரின் கேள்விப்பத்திர வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர் நியமித்த வேலையை முடிப்பதற்கு இலங்கையரையே வேலைக்கமர்த்தல் வேண்டும். அதுவும் வேலை ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதியில் சீவிப்பவரையே தேர்ந்தெடுத்தல் வேண்டும். கூலியாட்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கென இப்பொழுது பாவிப்பில் உள்ள சட்டங்கள், பின்னும் பாவிப்பிற்கு வரவிருக்கும் சட்டங்களுக்கு இணங்கவே,. இவ்வேலையை முடிப்பதற்குத் தரமான வேதனம் வழங்க வேண்டும்.

9. வேறு விபரங்கள் புத்தள அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பீ. எஸ். விஜயவீர,
அரசாங்க அதிபர்,
புத்தள மாவட்டம்.

73.08.15.

8-1152—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75.

---

### புத்தளம் மாவட்ட கட்டு வேலை சம்பந்தமாக கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளல்

1973.7.13 ம் திகதி 68 ம் இலக்க இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 'புத்தளம் மாவட்ட கட்டுவேலை' விளம்பரத்தின் கீழ் 7-252/1 இலக்க வர்த்தமானி விளம்பரத்தில் அடங்கியுள்ள கீழே கொடுக்கப்பட்ட வேலைகள் பொருட்டு கேள் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளுதல் ரத்துச்செய்யப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கிறேன். விபரங்கட்டு 1973.08.31 வர்த்தமானியைப் பார்க்கவும்.

| விபரம் | காரியாதிகாரி பிரிவு | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| நரியாகம விகாரை வீதி இரண்டாம் பகுதி | சிலாபம் | 18,000 |
| மகாகோன்வவ குடியேற்றத்திட்ட வீதி | நிக்கவரட்டிய | 18,000 |

பீ. எஸ். விஜயவீர,
அரசாங்க அதிபர்,
புத்தளம்.

8-1151—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75.

---

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் "காய்ச்சியிணைக்கும் கோல்களையும் அதே போன்ற இனங்களையும்" வழங்குவதற்காக 1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆந் தேதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை பொறியிட்ட கேள்விப் பத்திரங்களை (அகில உலக) ஏற்றுக்கொள்ளுவார்.

குறித்த முடிவுத் தேதிக்கு முந்திய நாள் நண்பகல் 12.00 மணிவரை எனது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் (உள்ளூர் அல்லது கடல் கடந்த) கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்படவேண்டும். ஒவ்வொரு தொகுதிக் கேள்விப் படிவத்துக்கும் மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பத்திரக் கட்டுப்பணம் 100 ரூபாவையும் மீளளிக்கப்படமாட்டாத கேள்விக் கட்டணம் 10 ரூபாவையும் காசாகக் கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டி, அவ்விதம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்விப்படிவங்கள் வழங்குவதற்காக எனது அலுவலகத்தில் காட்டவேண்டும்.

வேறேதேனும் மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வர்த்தக முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

31 ஆகஸ்ட், 1973,
வர்த்தகப் பிரிவு,
200, கிருல வீதி,
கொழும்பு-5.

8-1242/A—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

கொழும்பு கோட்டை, லக்சலவில் இசைச்சாதனங்கள் வழங்குவதற்கும், அமைப்பதற்கும், பேணுவதற்குமுரிய கேள்விகளைக் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்கள கேள்விச்சபைத்தலைவர் 1973.9.25 காலை பத்து மணி வரை ஏற்றுக்கொள்வார்.

2. மேலதிக விபரங்கட்கு சிறுகைத்தொழிற் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறுகைத்தொழிற்றிணைக்களப் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(5/58)
சிறுகைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.08.21.

8-1142—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75.

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவர் 1973.09.20 ந் திகதி காலை 10 மணி வரை ஹங்குரன்கெத மின்தறிக் கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்கான கேள்விகளை ஏற்றுக்கொள்வார்.

2. ரூபா 10,000 மோ அதற்கு மேற்படவோ செலவாகும் கட்டிடவேலைக்கென ஏதாவதொரு அரசாங்க திணைக்களத்தின் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்க்குக் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

3. விரும்பும் கேள்வியாளர்கள் கேள்விப் படிவங்களைப் பெறுவதற்கு 1973.09.19 நண்பகல் 12 மணிக்கோ அதன்முன்போ இத்திணைக்கள அலுவலகத்திற் கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 100 ஐச் செலுத்திப் பற்றுச் சீட்டையும் பதிவுச் சான்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

சோமபால குணதீர,
சிறுகைத்தொழிற்றிணைக்களப் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(1/60)
சிறுகைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.08.21.

8-1143—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75.

---

**உணவுப் பகுதி**

பாவனைக்குகந்ததல்லாத சணற் சாக்குகள், சாக்குப் பைகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள்

காமேஸ் களஞ்சியத்திலிருந்கும் சுமார் 64,768 சணற் சாக்குகள், சாக்குப்பைகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் 1973 செப்ரெம்பர் 18 செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிவரை 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவுக் காரியாலயத்தின் கோரிக்கைச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கோரிக்கைகள் ரூபா 500/- கட்டி இவ்வலுவலகத்திலிருந்து பெறும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும். இக்கோரிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இ. காத்தாமுத்து,
உணவு அதிகாரிக்காக.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1973, ஆகஸ்ட் 22.

8-1250—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75.

---

**தேர்தல் திணைக்களம்**

பழைய இணைப்படிப்பு (டுப்ளிகேட்டிங்) இயந்திரங்களும், தட்டெழுத்துப் பொறிகளும், டயர்களும், டியூப்களும் மற்றைய பொருட்களும்

கீழ்க்காணும் உபயோகமற்ற பொருட்களை விற்பதற்கான கேள்விப்பத்திரம் 1973 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் தேதி மு. ப. 11.45 மணி வரை கொழும்பு 7, ஹோட்டன் பிளேஸ், 33 ஆம் இலக்க இலத்தில் உள்ள தேர்தல் திணைக்களத்தில், தேர்தல் ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் திறக்கும் வேளையில் பிரசன்னமாயிருக்க விரும்பும் கேள்விப்பத்திரகாரர் எவரும் 1973 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ந் திகதி மு. ப. 11.45 மணிக்கு சமூகமளிக்க வேண்டும்.

| | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இணைப்படிப்பு (டுப்ளிகேட்டிங்) இயந்திரங்கள் (கெஸ்டெட்னர்) | 8 |
| 2. | " அண்டர்வுட் " கூட்டும் இயந்திரம் | 1 |
| 3. | ஆங்கில தட்டெழுத்துப் பொறிகள்—" ஹேர்மிஸ் " | 3 |
| 4. | ஆங்கில தட்டெழுத்துப் பொறிகள்—ரெமிங்ரன் | 1 |
| 5. | ஆங்கில தட்டெழுத்துப் பொறிகள்—அண்டர்வுட் | 4 |
| 6. | ஆங்கில தட்டெழுத்துப் பொறிகள்—இம்பீரியல் | 2 |
| 7. | ஆங்கில தட்டெழுத்துப் பொறிகள்—ரோயல் | 1 |
| 8. | தமிழ் தட்டெழுத்துப் பொறி—வுட்ஸ்ரொக் | 1 |
| 9. | சிங்கள தட்டெழுத்துப் பொறி—ஒலிம்பியா | 1 |
| 10. | சைக்கிள்கள் | 4 |
| 11. | மின் குளிரூட்டுப் பெட்டி | 1 |
| 12. | மடிக்கக்கூடிய கென்வஸ் கேம்ப் கட்டில் | 1 |
| 13. | மலசல இருப்பு ஆசனம் | 2 |
| 14. | டோர்ச் விளக்குகள் | 23 |
| 15. | குடைகள் (ஆண்கள்) | 2 |
| 16. | மேசைக் கத்தி | 1 |
| 17. | இரு துவார பஞ்சர் | 1 |
| 18. | பழைய டயர்கள் | 30 |
| 19. | பழைய டியூப்கள் (ஜீப் அளவு) | 27 |
| 20. | பழைய ஜீப் மேல் துணி | 1 |
| 21. | பழைய ஸிளச் பிளேட்டுகள் (ஜீப்) | 9 |
| 22. | பழைய ரிங்கியர்கள் (ஜீப்) | 4 |
| 23. | பழைய யுனிவர்சல் சந்திகள் (ஜீப்) | 4 |
| 24. | ஸ்டாட்டர் மோட்டார் சுவிச் | 1 |
| 25. | வீல் சிலிண்டர் (பியூஜோ கார்) | 1 |
| 26. | ரை ரொட்ஸ் | 2 |
| 27. | மின் ஹோரன் செட்டுகள் | 2 |
| 28. | பழைய ரேடியேட்டர் | 1 |
| 29. | கிறிஸ் வீல் கெப்கள் (ஜீப்) | 2 |
| 30. | சிங்குரோமெஸ் | 1 |
| 31. | சோக் அப்சோபர்ஸ் | 9 |
| 32. | ஆமச்சர்ஸ் | 2 |
| 33. | பழைய பட்டரிகள் | 3 |
| 34. | என்ஜின் தலை (வில்லிஸ் ஜீப்) | 1 |
| 35. | பழைய புதினப் பத்திரிகைகள்—இரு. | 110 |
| 36. | இணைப்படிப்பு மை டியூப் உறைகள் (ஈயம்) | 315 |
| 37. | ஸ்பீடோ மீட்டர் கடிகாரம் | 1 |

2. கீழே குறிக்கப்பட்டுள்ள பத்திரத்தில் தமது கேள்வியை சமர்ப்பிக்க விரும்பும், அல்லது கேள்விப் பத்திரங்களுக்கான பத்திரங்களை பெற விரும்பும் கேள்விப்பத்திரகாரர்கள் இந்தக் கந்தோருக்கு நேரில் சமூகமளிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடும் தேர்தல் ஆணையாளருக்கான ரூபாய் இருபத்தைந்து (ரூபா 25) பெறுமதியான காசுக்கட்டளை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளாக ஒரு உறையிலிட்டு பொறியிடப்பட்டு, அதை மற்றுமொரு உறையிலிட்டு, அதையும் பொறியிட்டு தேர்தல் ஆணையாளர், தபால் பெட்டி இல. 814, கொழும்பு 7 என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும்.

மேலுறையின் மேல் இடது மூலையில் " பழைய இணைப்படிப்பு (டுப்ளிகேட்டிங்) இயந்திரங்களும், தட்டெழுத்துப் பொறிகளும், டயர்களும், டியூப்களும் மற்றைய உபயோகமற்ற பொருட்களும் " வாங்குவதற்கான கேள்விப்பத்திரமென்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரத்திலுள்ள திருத்தங்கள் அழித்தல்கள் ஆகியன கேள்வியாளரால் முதலெழுத்து ஒப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்களைப் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது இதன் கீழ் கையொப்பமிட்டிருப்பவரின் கந்தோரில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடவோ முடியும். பொருட்களை பரிசீலனை செய்ய விரும்பும் கேள்விப்பத்திரகாரர்கள் தேர்தல் ஆணையாளர் கந்தோரில், சாதாரண நாட்களில் மு. ப. 8.30 மணி தொடக்கம் 11.30 மணி வரையும், பிற்பகல் 1.00 மணி முதல் 3.00 மணி வரையும் சனிக்கிழமை நாட்களில் மு. ப. 8.30 மணி முதல் 11.00 மணி வரையும் பரிசீலனை செய்யலாம்.

6. கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்வதில் எந்தப் பொருளிலும் அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமான விலைகள் கிடைப்பதே முக்கிய குறிக்கோளாயிருக்கும். ஆகையால் திணைக்களம் எந்த ஒரு கேள்விப் பத்திரத்தையோ அதன் ஒரு பிரிவையோ எவ்வித கேள்வியுமின்றி ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ உரிமையுடையதாயிருக்கும்.

7. கேள்விப்பத்திரத்தை ஏற்றுக்கொண்டதை அறிவிக்கும் கடிதம் கிடைத்து ஐந்து (5) நாட்களுக்குள், கேள்விப்பத்திரகாரர் பொருட்களை அகற்றத் தவறினால் அவரது கேள்விப்பத்திரக் கட்டுப்பணத்தை இழப்பதுமல்லாது, அவரது பெயர் கடமைகளில் தவறிய ஒப்பந்தகாரர்கள் பட்டியலில் சேர்க்கப்படும். கேள்விப்பத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் கடிதம், அவர் கொடுத்த முகவரிக்கு அனுப்பப்பட்டோ, அல்லது அந்த முகவரியில் சேர்க்கப்பட்டோ இருந்தால், கேள்வியாளர் அவரது கேள்விப் பத்திரத்தை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும். எல்லா விற்பனைகளும் அதற்கான சகல நடவடிக்கைகளெல்லாம் முடிந்த பின்னரே கேள்விப் பத்திரத்தின் கட்டுப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

8. மேற்சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கு அடங்கியிராத கேள்விப் பத்திரங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

ஈ. எவ். டயஸ். அபேசிங்க,
தேர்தல் ஆணையாளர்.

தேர்தல் ஆணையாளர் கந்தோர்,
த. பெ. எண். 814,
33, ஹோட்டன் பிளேஸ்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 20 ந உ.

**படிவம்**

(இணைப்புப் பிரதிகளுடன்)

**பழைய இணைப்படிப்பு (டுப்பிளிகேட்டிங்) இயந்திரங்கள், தட்டெழுத்து பொறிகள், டயர்கள், டியூக்களும், மற்றும் உபயோகமற்ற பொருட்களையும் வாங்குவதற்கான கேள்விப்பத்திரம், தேர்தல் திணைக்களம், கொழும்பு 7**

| பொருட்கள் | எண்ணிக்கை | கூறு விலை ரூ. ச. (இலக்கத்தில்) | கூறு விலை ரூ. ச. (எழுத்தில்) |
|---|---|---|---|
| 1. இணைப்படிப்பு (டுப்பிளிகேட்டிங்) இயந்திரங்கள் (கெஸ்டெட்னர்) .. | 8 | | |
| (1) 66இ/305124 | | ...... | ........ |
| (2) 66இ/306289 | | ...... | ........ |
| (3) 260—573781 | | ...... | ........ |
| (4) 130 ரி 493387 | | ...... | ........ |
| (5) 130ரி 470600 | | ...... | ........ |
| (6) 160ரி 499552 | | ...... | ........ |
| (7) 260—581460 | | ...... | ........ |
| (8) 260ரி 647253 | | ...... | ........ |
| 2. "அண்டர்வுட்" கூட்டும் இயந்திரம் | 1 | | |
| இல. 530089/8120 | | ...... | ........ |
| 3. ஆங்கில தட்டெழுத்துப் பொறிகள்—"ஹேர்மிஸ்" .. | 3 | | |
| (1) இல. 8050890—12″ | | ...... | ........ |
| (2) இல. 8050791—12″ | | ...... | ........ |
| (3) இல. 8050170—18″ | | ...... | ........ |
| 4. ஆங்கில தட்டெழுத்துப் பொறிகள்—"ரெமிங்ரன்" .. | 1 | | |
| இல. எஸ் ஜே. 339174—12″ | | ...... | ........ |
| 5. ஆங்கில தட்டெழுத்துப் பொறிகள்—"அண்டர்வுட்" .. | 4 | | |
| (1) இல. 11—6464669—12″ | | ...... | ........ |
| (2) இல. 11—6224006—12″ | | ...... | ........ |
| (3) இல. 11—6465301—12″ | | ...... | ........ |
| (4) இல. 11—6426123—12″ | | ...... | ........ |
| 6. ஆங்கில தட்டெழுத்துப் பொறிகள்—"இம்பீரியல்" .. | 2 | | |
| (1) இல. இசட். 165397—12″ | | ...... | ........ |
| (2) இல. 290890—15″ | | ...... | ........ |
| 7. ஆங்கில தட்டெழுத்துப் பொறிகள்—"ரோயல்" .. | 1 | | |
| இல. கேஎம்ஜீ 15.ஆர் 4334169—15″ | | ...... | ........ |
| 8. தமிழ் தட்டெழுத்துப் பொறிகள்—"வுட்ஸ்ரொக்" .. | 1 | | |
| இல. என். 518240—12″ | | ...... | ........ |
| 9. சிங்களத் தட்டெழுத்துப் பொறி—"ஒலிம்பியா" .. | 1 | | |
| இல. 7—27763 / 7–355459 —15″ | | ...... | ........ |
| 10. சைக்கிள்கள் .. | 4 | | |
| (1) இல. எச்சி. 02785—"ரேலி மாஸ்டர்" | | ...... | ........ |
| (2) இல. எவீ. 51437—"ரெலி" | | ...... | ........ |
| (3) இல. பிபி. 17311—"ரெலி" | | ...... | ........ |
| (4) இல. ஏரீ. 55886 .. | | ...... | ........ |
| 11. "மின்" குளிரூட்டுப் பெட்டி : 04 அடி .. | 1 | ...... | ........ |
| 12. மடிக்கக்கூடிய கென்வஸ் கேம்ப் கட்டில் .. | 1 | ...... | ........ |
| 13. மலசல இருப்பு ஆசனம் | 2 | ...... | ........ |
| 14. டோர்ச் விளக்குகள் | 23 | ...... | ........ |
| 15. குடைகள் (ஆண்கள்) | 2 | ...... | ........ |
| 16. மேசைக் கத்தி .. | 1 | ...... | ........ |
| 17. இரு துவார பஞ்சர் | 1 | ...... | ........ |
| 18. பழைய டயர்கள் .. | 30 | | |
| அளவுகள் : 700 × 15—12 | | ...... | ........ |
| 380 × 165—8 | | ...... | ........ |
| 750 × 16—4 | | ...... | ........ |
| 600 × 16—4 | | ...... | ........ |
| 710 × 15—2 | | ...... | ........ |
| 19. பழைய டியூப்கள் (ஜீப் அளவு) | 27 | ...... | ........ |
| 20. பழைய ஜீப் மேல் துணி | 1 | ...... | ........ |
| 21. பழைய கிளச் பிளேட்டுகள் (ஜீப்) | 9 | ...... | ........ |
| 22. பழைய ரிங்கியர்கள் (ஜீப்) | 4 | ...... | ........ |
| 23. பழைய யுனிவர்சல் சந்திகள்(ஜீப்) | 4 | ...... | ........ |
| 24. ஸ்டாட்டர் மோட்டார் சுவிட்ச் | 1 | ...... | ........ |
| 25. வீல் சிலிண்டர் (பியூஜோ கார்) | 1 | ...... | ........ |
| 26. ரை ரொட்ஸ் .. | 2 | ...... | ........ |
| 27. மின்கோன் செட்டுகள் | 2 | ...... | ........ |
| 28. பழைய ரேடியேட்டர் | 1 | ...... | ........ |
| 29. கிரிஸ் வீல் கெப்கள் (ஜீப்) | 2 | ...... | ........ |
| 30. சிங்குரோமெஸ் .. | 1 | ...... | ........ |
| 31. சொக் அப்சோபர்ஸ் | 9 | ...... | ........ |
| 32. ஆமச்சர்ஸ் .. | 2 | ...... | ........ |
| 33. பழைய பட்டரிகள் | 3 | ...... | ........ |
| 34. என்ஜின் தலை (வில்லிஸ் ஜீப்) | 1 | ...... | ........ |
| 35. பழைய புதினப் பத்திரிகைகள்—இரு | 110 | ...... | ........ |
| 36. இணைப்படிப்பு மை டியூப் உறைகள் (ஈயம்) | 315 | ...... | ........ |
| 37. ஸ்பீடோ மீட்டர் கடிகாரம் .. | 1 | ...... | ........ |

கீழே கையொப்பமிடப்பட்டிருக்கும் ........................
ஆகிய நான் மேற்கூறிய பொருட்களை வாங்குவதற்கான கேள்விப்பத்திரத்தை அனுப்பிவைக்கிறேன்.

.......................
கேள்விப்பத்திரகாரரின் கையொப்பம்.

தேதி :..........

கேள்விப்பத்திரகாரரின் பெயரும் முகவரியும் :
..............................
..............................
..............................

8–1217—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

### வேலைப் பணிப்பாளர் அலுவலகம்—கலாவெவப் பிரிவு

கலாவெவப் பிரிவின் கீழ்க்காணும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் வடமத்திய பிரதேச வேலைப் பணிப்பாளர் அவர்கள் 1973 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21 ந் திகதி காலை 10.30 மணி வரைக்கும் பெற்றுக் கொள்ளப்பட்டு அதன்பின் உடனடியாகத் திறக்கப்படும்.

| வேலைகளின் விபரம் | | பதிவுத்தொகை | | | கேள்விப்பத்திரக் கட்டணம் | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ரொட்டவெவ திருத்த வேலைகள் | .. | 35,000 | 0 | .. | 50 | 0 |
| கலம்பவட்டிய திருத்த வேலைகள் | .. | 18,000 | 0 | .. | 25 | 0 |
| கலம்பாவெவ திருத்த வேலைகள் | .. | 16,000 | 0 | .. | 25 | 0 |

2. வேலைப் பணிப்பாளர் அலுவலகத்தில் மேற்கூறிய தொகைக்கோ அல்லது அதற்கு மேலோ பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விப்பத்திரங்கள் மகா இலுப்பள்ளத்தில் உள்ள கலாவெவப் பிரிவு—கெக்கிராவப் பிரிவு—மாதன்கடவெலப் பிரிவு ஆகிய நிறைவேற்றுப் பொறியியலாளர் கந்தோர்களில் அலுவலக நேரங்களில் 1973 புரட்டாதி மாதம் 18 ந் திகதி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் நாம் இப்போது அலுவலகத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் தெரியப்படுத்தி கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் கேள்விக்கட்டணமாக மேற்கூறிய தொகையை கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் நிறைவேற்றுப் பொறியியலாளர் கந்தோர்களில் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

4. மேலதிக விபரங்கள் கலாவெவ நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவுக் கந்தோரில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வே. இரகுநாதன்,
நிறைவேற்றுப் பொறியியலாளர்,
கலாவெவப் பிரிவு,

நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்,
கலாவெவப் பிரிவு,
மகா இலுப்பள்ளம்,
1973 ம் ஸ்ரீ ஓகத்து ம்ீ 20 உ.

8–1252—31.08.73—ந் திகதிய வர்த்தமானி இல. 75

---

### கேள்வி விளம்பரம்

கொழும்பு 1, 63 ஜனாதிபதி மந்திரிய மாவத்தையில் இருக்கும் ஹோட்டல் கூட்டுத்தாபன பொது முகாமையாளர் பொறியிட்ட கேள்விகளை மாதிரிகளுடன் கீழ்வரும் விடயங்களை ஏற்றுக்கொள்வார்.

மெத்தை விரிப்புகள் 54″ × 28″ வெள்ளை
தலையணி உறைகள் 18″ × 28″ வெள்ளை
கை துடைப்பிகள் (நப்கின்ஸ்)
துடைப்பம் (டஸ்ரேஸ்)
ரீ சேவியற்ஸ்
"ரேக்கி" குளியல் அறைத் துவாய்கள்—வெள்ளை
"ரேக்கி" முகம் துடைக்கும் துவாய்கள்—வெள்ளை

கேள்வி விண்ணப்பங்கள் 1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ம் திகதி வெள்ளிக்கிழமை மூடப்படும்.

தயவுசெய்து தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் துணிவகைகளுக்கான கூறுவிலைகள் எனக் குறிப்பிடுக.

ஒஸ்ரின் ஜயவர்த்தன,
பொது முகாமையாளருக்காக,
இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனம்.

8-1296 –31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

---

### தேயிலைக் கட்டுப்பாட்டு இலாகா

கேள்விப்பத்திர அறிவித்தல்

பாவிக்கப்பட்ட ரயர்கள், டியூப்கள், உதிரிப்பாகங்கள் வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ந் தேதி பி. ப. 2.00 மணிவரை என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும். விபரங்கள் பின்வருமாறு—

| | | |
|---|---|---|
| (i) (750 × 20, 700 × 20, 825 × 20) லொறி ரயர்கள் | .. | 65 |
| (ii) (600 × 16, 760 × 15, 750 × 20) ஜீப் ரயர்கள் | .. | 16 |
| (iii) (165 × 380) கார் ரயர்கள் | .. | 11 |
| (iv) (750 × 20) லொறி ரியூப்கள் | .. | 24 |
| (v) உதிரிப்பாகங்கள் (பலதரப்பட்டவை) | .. | |

2. கேள்விப்பத்திரங்களும், கேள்வி சம்பந்தமான நிபந்தனைகளையும் கொழும்பு 1, கொமர்ஷல் வங்கிக்கட்டடம், த. பெ. 363 என்ற இடத்தில் அமைந்துள்ள தேயிலைக்கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

————————,
தேயிலைக் கட்டுப்பாட்டாளர்.

தேயிலைக்கட்டுப்பாட்டு இலாகா,
த. பெ. 363,
கொமர்ஷல் வங்கிக்கட்டடம்,
கொழும்பு 1.

8–1219—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல.75.

---

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

### இலங்கை கடற்படையின் வாகன விற்பனை

1973 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ம் திகதி காலை 10.30 மணிக்கு, கொழும்பு 1 கொடிமர வீதியில் உள்ள கடற்படைத் தலைமைக் காரியாலயத்தில் உபயோகமற்ற கீழ்க்காணும் வாகனங்கள் ஏலத்தில் விற்பனையிடப்படும்—

1. நாஹ 5247 — என்ஜின் அற்ற பெட்போட் லொறி
2. நாஹ 5251 — என்ஜினும் பொடியுமற்ற பெட்போட் லொறி
3. நாஹ 5061 — என்ஜினும் பொடியுமற்ற தேம்ஸ் றேடர் லொறி
4. நாஹ 5024 — பெட்போட் வான்
5. நாஹ 5084 — என்ஜினற்ற தேம்ஸ் வான்
6. நாஹ 5211 — ஸ்டிபேகர்லாக்கார்
7. நாஹ 5030 — பொடி அற்ற போட் தேம்ஸ்
8. நாஹ 5016 — என்ஜினும் சாஸியுமற்ற விலிஸ் ஸ்டேசன் வகன்

2. இவ்வாகனங்களை விற்பனையன்று காலை 8 மணியிலிருந்து பார்வையிடலாம்.

3. விற்பனையாகிய வாகனங்களைப் பெற்றுக் கொள்ளும்பொழுதே அவற்றிற்குரிய முழுப் பணத்தையும் செலுத்துதலோடன்று மாலை 3.30 மணிக்கு முன் அவற்றை அப்புறப்படுத்தல் வேண்டும்.

டி. பி. குணசேகர,
கடற்படைத் தளபதி

தலைமைக் காரியாலயம்,
இலங்கைக் கடற்படை,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் 18.

8–1249—31.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 75

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஒகத்து | 3.8.73 | வெள்ளி | 25.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 1.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 8.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 15.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 22.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.